அடையாள இலக்கம்

B

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2022

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## மத்திய பிரிவு

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**அ). பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.** (10 புள்ளிகள்)

| | |
|---|---|
| 1 பச் ______ நிறம் | 6. தைப்பொங்க ______ |
| 2 புத ______ கிழமை | 7. கு ______ ரைவண்டி |
| 3 கங்கா ______ | 8 ச ______ ரம் |
| 4 வ ______ க்கம் | 9 கொய்யாப் ப _____ ம் |
| 5 தி ______ ப்படம் | 10 புள்ளிக் ______ லம் |

**(ஆ) கீழே தரப்பட்ட ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.** (10 புள்ளிகள்)

1. அவன் - ______________________________
2. செடி - ______________________________
3. பல் - ______________________________
4. மரம் - ______________________________
5. நீ - ______________________________

**(இ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.** (10 புள்ளிகள்)

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது**

1. எனது நண்பன் எழுதிய ____________________ விழா மலரில் பிரசுரித்தனர்.
   அ) கட்டுரையை ஆ) கட்டுரையோடு
   இ) கட்டுரையால் ஈ) கட்டுரைக்கு

2. பரீட்சையிற் சிறப்பாகச் செய்திருந்த ____________________ ஆசிரியர்கள் பாராட்டினார்கள்.
   அ) மாணவர்களுக்கு ஆ) மாணவர்களை
   இ) மாணவர்களின் ஈ) மாணவர்களுடைய

3. திருவள்ளுவர் ____________________ இயற்றினார்.

அ) திருக்குறளுக்கு ஆ) திருக்குறளால்

இ) திருக்குறளை ஈ) திருக்குறளுடன்

4. ____________________ குறும்புகளைப் பார்த்து குழந்தை சிரித்தது.

அ) தாய் ஆ) நான்

இ) என்னைப் ஈ) என்னுடைய

5. நேற்றைய ஓவியக் கண்காட்சியை ____________________ பார்க்க முடிந்ததா?

அ) உன்னை ஆ) உன்னால்

இ) உன் ஈ) உன்னுடன்

**(ஈ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. சிங்கம் **காட்டில்** வாழும்.

அ) வீட்டில் ஆ) தெருவில்

இ) வனத்தில் ஈ) நாட்டில்

2. கங்காரு ஒரு **விநோதமான** மிருகம்.

அ) மிகப்பெரிய ஆ) விந்தையான

இ) சாதுவான ஈ) கொடூரமான

3. **அம்மா** என் மேல் அன்பு உள்ளவர்.

அ) தந்தை ஆ) அன்னை

இ) மாமி ஈ) மாமா

4. மிருகக்காட்சி சாலையில் பலவகையான **விலங்குகளைப்** பார்க்கலாம்.

அ) மிருகங்களைப் ஆ) பறவைகளைப்

இ) பாம்புகளைப் ஈ) மனிதர்களைப்

5. கண்ணனின் தகப்பனார் ஆசிரியராகத் **தொழில்** புரிகிறார்.

அ) வேலை ஆ) குரு

இ) உழைப்பு ஈ) கற்றல்

**(உ) முதல் வாக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட வினைச்சொல்லை அதன் கீழுள்ள வாக்கியத்தின் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி தரப்பட்ட இடைவெளிக்குள் எழுதுக.** (10 புள்ளிகள்)

1. நான் இப்பொழுது தமிழ் **கற்கிறேன்**.

   என் தோழியும் இப்பொழுது தமிழ் ____________________.

2. புறாக்கள் கூட்டமாக பறந்து சென்றன.

   நாளையும் புறாக்கள் கூட்டமாக பறந்து ____________________.

3. குழந்தை பாயில் தவழ்ந்தது.

   இப்பொழுது குழந்தை பாயில் ____________________.

4. நான் சென்ற வருடம் இரண்டாம் வகுப்பிலே படித்தேன்

   அடுத்த வருடம் நான் நான்காம் வகுப்பில் ____________________.

5. அம்மா எப்போதும் பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவார்.

   நேற்றும் அதேபோலவே அம்மா பூச்செடிகளுக்கு தண்ணீர்

   ____________________.

**(ஊ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தேரிந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையை பூர்த்தி செய்க.**

(20 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| விடுவதாக | கடைசி | சாவதற்கு | இடையன் |
| குழல் | ஆட்டுக்குட்டியால் | சத்தம் | காப்பாற்றி |
| முடிந்தால் | அழுதது | ஊதுகிறேன் | கானத்தில் |

ஓநாய் ஆட்டுக்குட்டி ஒன்றை சாமர்த்தியமாகத் திருடிக்கொண்டு சென்றது. எவ்வளவு முயன்றும் (1) ______________________ தப்பித்துச் செல்ல முடியவில்லை. ஓநாயும் ஆட்டுக்குட்டியை (2) ______________________ இல்லை. ஆட்டுக்குட்டிக்கு ஒரு திடீர் யோசனை தோன்றியது. “ஓநாயாரே, எப்படியும் நீங்கள் என்னைக் கொல்லத்தான் போகிறீர்கள், (3) ______________________ முன்னால் எனக்கு ஒரு (4) ______________________ ஆசை இருக்கிறது. நிறைவேற்றி வைப்பீர்களா?” என்றது.

“சொல் (5) ______________________ கட்டாயம் செய்கிறேன்” என்றது ஓநாய். “நீங்கள் நன்றாக குழல் ஊதுவீர்களாமே! எங்கே உங்கள்

(6) ______________________ ஓசையைக் கேட்டுக் கொண்டே நான் சாக விரும்புகிறேன்” என்றது ஆட்டுக்குட்டி.

“இதோ (7) ______________________” என்று கூறி ஓநாய் குழல் ஊதத் தொடங்கியது. இடையிடையே ஓநாய் குழலை நிறுத்தும் போதெல்லாம் “இன்னும் கொஞ்சம் உங்கள் இன்பக் (8) ______________________ நனைகிறேனே” என்று ஆட்டுக்குட்டி கூற, ஓநாயும் ஊதிக்கொண்டே இருந்தது. இதற்கிடையே ஆட்டுக்குட்டியை காணாத (9) ______________________ வேட்டை நாய்களுடன் குழல் (10) ______________________ கேட்கும் திசையை நோக்கி வர, தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓநாய் ஓடியே போய்விட்டது.

**(எ) கீழேயுள்ள படத்தொடரைக் கவனமாகப் பார்த்து, கருத்தை விளங்கி தரப்பட்ட ஐந்து (5) சொற்களுக்கு பொருத்தமான வசனங்களை எழுதுக.**

**குறிப்பு: மிகக் குறைந்தது 7 சொற்கள் கொண்ட வசனமாக இருக்கவேண்டும்.**




1. செய்தித்தாள் :

**2.** சிறுவன் :

**3.** குப்பைத்தொட்டி :

**4.** புகைபிடித்தல் :

**5.** பொதிகள் :

(15 புள்ளிகள்)

ஏ) குறைந்தது 40 சொற்களில் கீழே தரப்பட்ட தலைப்பைப் பற்றி எழுதுக.

(புள்ளிகள்: 15)

**எனது நண்பன்**